# கூடலூர் நகராட்சி(நீலகிரி)
## 30.07.2021 ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கை நகல்.
## தலைமை– திரு.வீ.பாஸ்கரன்.எம்.ஏ., தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்

1) 14.07.2021 அன்று காலியாக உள்ள வணிக வளாக கடை பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி அறிவிப்பினை தொடர்ந்து திருவள்ளுவர் வணிக வளாக கடை எண் 18 க்கு இரண்டு நபர்கள் முன்வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர் மற்றும் இதற்க்கான ஒப்பந்தபுள்ளி கோர ஒருவரும் முன்வரவில்லை. எனவே ஏலத்தில் திரு.சத்திய சீலன் என்பவர் மாதவாடகை ரூ.2950/– க்கு கோரியுள்ளார்.திரு.மோகன் சந்திரன் என்பவர் மாத வாடகை ரூ.3000 க்கு ஏலம் கேட்டுள்ளார் இக்கடைகள் கடந்த 2 வருடங்களாக காலியாக உள்ளதாலும் அதிக தொகைக்கு யாரும் ஏலம் கோர முன்வராத நிலையில் நகராட்சி நிதியிருப்பினை கருத்தில் கொண்டு மாத வாடகை ரூ.3000 க்கு ஏலம் கேட்டுள்ள திரு.மோகனசந்திரன் என்பவரின் ஏலத்தினை உறுதி செய்து ஆகஸ்ட் 2021 முதல் 3 ஆண்டு காலத்திற்கு ஒப்படைப்பு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு** – **1)** திரு.மோகனசுந்திரன் என்பவரின் மாத வாடகை ரூ.3000/–க்கான குறைந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்றுகொள்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**2)** திருவள்ளுவர் வணிக வளாக கடை எண் 1,2,3,4,10,11 மற்றும் 19 மறு ஏலம் கொண்டு வரலாம்.

**3)** மீன் கடை வணிகவளாகம் கடை எண் 23 மறு ஏலம் கொண்டு வரலாம்.

2) 14.07.2021 அன்று காலியாக உள்ள வணிக வளாக கடை பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி அறிவிப்பினை தொடர்ந்து பாரதிதாசன் வணிக வளாக கடை எண் 14 க்கு இரண்டு நபர்கள் முன்வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர் மற்றும் இதற்க்கான ஒப்பந்தபுள்ளி கோர ஒருவரும் முன்வரவில்லை. எனவே ஏலத்தில் திரு.நிசார் அம்சா என்பவர் மாதவாடகை ரூ.3000/– க்கு கோரியுள்ளார்.திரு.சுதீர் காலடி என்பவர் மாத வாடகை ரூ.3050/– க்கு ஏலம் கேட்டுள்ளார் இக்கடைகள் கடந்த 2 வருடங்களாக காலியாக உள்ளதாலும் அதிக தொகைக்கு யாரும் ஏலம் கோர முன்வராத நிலையில் நகராட்சி நிதியிருப்பினை கருத்தில் கொண்டு மாத வாடகை ரூ.3050/– க்கு ஏலம் கேட்டுள்ள திரு.மோகனசந்திரன் என்பவரின் ஏலத்தினை உறுதி செய்து ஆகஸ்ட் 2021 முதல் 3 ஆண்டு காலத்திற்கு ஒப்படைப்பு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு** – திரு.சுதீர் காலடி என்பவரின் மாத வாடகை ரூ.3050/–க்கான குறைந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்றுகொள்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

3) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மற்றும் குடிநீர் பிரிவு வாகனங்கள் TN 43 Y 0725, TN 43 Z 4447, TN 43 Z 4448 மற்றும் TN 43 Z 4443 ஆகியவற்றின் காப்பீட்டு புதுப்பித்தல் கட்டணம் யுனைட்டட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்டட் செலுத்துவதற்கு அதற்கான உத்தேச செலவினம் ரூ.115000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – **1)** அனுமதி வழங்கலாம்

**2)** பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் ஏற்கலாம்.

4) இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண் 4 நாள் 31.05.2021 ல் ஒப்பந்த அடிப்படையில் பொது பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவு ஆகிய பிரிவுகளில் பணிபுரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2020 ம் ஆண்டு விலை விகித பட்டியலின்படி திரு.உசைன் ஒப்பந்ததாரின் மூலமாக புள்ளி விபர குறிப்பாளர்–2 பிரிவு எழுத்தர்–4 தொழில் நுட்ப உதவியாளர்–1 உதவியாளர் தட்டச்சர் –3 பணியாளர்களுக்கு 01.04.2021 முதல் 30.06.2021 வரை மூன்று மாத காலங்களுக்கு அனுமதி பெறப்பட்டிருந்தது. இந்நிலையில் அனுமதி காலம் 30.06.2021 ல் முடிவடைவதால் தற்பொழுது கொரோனா அரசு தடை ஆகிய காரணங்களுக்காக மேற்படி பணியாளர்களுக்கு ஒப்பந்த புள்ளி கோரி பணியினை செய்ய இயலாத நிலை உள்ளதால் நிர்வாக நலன் கருதி ஏற்கனவே ஒப்படைக்கப்பட்ட

ஒப்பந்ததாரர் திரு.உசைன் அவர்கள் மூலமாக 01.07.2021 முதல் 30.09.2021 வரை உள்ள மூன்று மாத காலங்களுக்கு தொடர்ந்து வைத்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – **01.07.2021** முதல் **30.09.2021** வரை மூன்று மாதங்களுக்கு ஒப்பந்ததாரர் திரு.உசைன் அவர்கள் மூலம் பணி அமர்த்தி பணி செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.520000/– க்கு அனுமதி வழங்கலாம்.

5) இந்நகர்மன்ற தீர்மானம் எண்.11 நாள்.31.05.2021 ன் அனுமதியின் பேரில் இந்நகராட்சி வாகனங்களை இயக்குவதற்கு 7 ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். ஒப்பந்த காலம் 30.06.2021 உடன் முடிவடைந்ததால் 01.07.2021 முதல் மேலும் மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–1)** அனுமதி வழங்கலாம்.

**2)** நகராட்சி பணிகள் அவசியம் கருதி 01.07.2021 முதல் பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்.

6) இந்நகர்மன்ற தீர்மானம் எண்.10 நாள்.31.05.2021 ன் அனுமதியின் பேரில் நகராட்சி நுண்ணுயிர் உரக்கூடத்தில் 7 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். ஒப்பந்த காலம் 30.06.2021 உடன் முடிவடைந்ததால் 01.07.2021 முதல் மேலும் மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :– 1)** அனுமதி வழங்கலாம்.

**2)** பொது சுகாதார அவசியம் கருதி 01.07.2021 முதல் பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்.

7) கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு எண் 1204/6 கொண்ட ஹெல்த் கேம்ப் பகுதியில் அமைந்துள்ள காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள் கட்டிடம் கட்ட அனுமதி கோரி இளநிலை பொறியாளர், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம் கோவை கோட்டம் அவர்களால் விண்ணபிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வேளாண்மை பொறியியல் துறை, வனத்துறை,புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆகியோர்களது தடையில்லா சான்று கோரி விண்ணப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட துறைகளிடமிருந்து பெறப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைமையிலான கட்டிட அனுமதி வழங்கும் குழுவில் 09.01.2020 அன்று பொருள் வைக்கப்பட்டு மாவட்ட ஆட்சியிர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.டி10/20458/2017 நாள் 23.01.2020 மூலம் கட்டிட அனுமதி வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்படி காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலக கட்டிடம் தரைதளம் மற்றும் முதல் தளங்கள் 258.57 சதுர மீட்டர் என்ற அளவுகளில் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலக கட்டிடம் கட்ட மாவட்ட ஆட்சித்தலைவர், உதகமண்டலம் அவர்களின் மூலம் கட்டும் AAA குழுவின் அனுமதி வேண்டி தடையின்மை சான்று மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மூன்று துறைகளின் தடையில்லா சான்று பெறப்பட்டு மாவட்ட கட்டிட அனுமதி வழங்கும் குழுவில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால் மாவட்ட ஆட்சித்தலைவர் அனுமதி வேண்டி அனுப்பலாம்.

8) இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் குடிநீர் பற்றாக்குறையை தடுப்பதற்கு குடிநீர் வழங்க கூடிய நீர் ஆதாரங்களை சுத்தப்படுத்துதல் அவற்றில் பொருத்தப்பட்ட மின்மோட்டார் மற்றும் குடிநீர் குழாய்கள் சீரமைத்தல் அதன் விபரம் கீழ்வருமாறு

மஞ்சமூலா கிணற்றிற்கு பம்ப் அறை அமைப்பதற்கும், கிணற்றை சுற்றி நடைபாதை அமைத்து மின்சார வசதி செய்து கொடுத்தல், சுற்றியுள்ள பகுதியில் உள்ள 20 HP மின்மோட்டார் சரி செய்வதற்கும், செம்பாலா No 4 செக்டேம், 20 HP மின் மோட்டார் சரி செய்தல், தொரப்பள்ளி பகுதியில் பொருத்தப்பட்ட 25 HP மின் மோட்டார் சரி செய்யவும், யாணைசெத்தகொல்லி பகுதியில் பொருத்தப்பட்ட 20 HP மின் மோட்டார் சரி செய்யவும், புத்தூர்கவல பகுதியில் உள்ள 15 HP மின் மோட்டார் சரி செய்யவும், கோழிப்பாலம் பில்டர் டேங்க் மின் மோட்டார் கேரியர் 6 சரி செய்வதற்கும், ஆத்துார் பிரதான குழாயின் பாகங்களை பொருத்தவும் தடுப்பணையை No 4 செக்டேம், அத்திபாளி கிணறு ஆகியவை துார்வாருதல், ஏ.கே.நகர், பள்ளிப்படி, எஸ் எஸ் லாட்ஜ் பகுதியில் உள்ள கிணற்றை சுத்தம் செய்வதற்கும், குயின்ட்

முதல் காந்தி நகர் நீர் தொட்டி வரை பழுதடைந்த 110 HDPE குழாயினை மாற்றி பணியினை செய்வதற்கும் தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சத்தில் பணியினை உடனடியாக மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1950 பிரிவு 15 ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.ஜெயநாதன் அவர்கள் மூலம் செய்து முடிப்பதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** அனுமதி வழங்கலாம்.

9) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோணா தொற்று ஏற்பட்ட பகுதிகளிலிருந்து பொதுமக்கள் பிற பகுதிகளுக்கு செல்வதை தடுப்பதற்காக தகர ஷீட்டுகள் கொண்டு அடைப்பு ஏற்படுத்தும் பணியினை மேற்கொள்ள விலைப்புள்ளிகள் கோரப்பட்டடதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு. உசைன், கூடலூார் | ரூ.460 ( ஒரு சதுர அடிக்கு) |
| 2 | திரு. ஜீவகன், கூடலூார் | ரூ.455 ( ஒரு சதுர அடிக்கு) |
| 3 | திரு. ஜெகநாதன், கூடலூார் | ரூ.480 ( ஒரு சதுர அடிக்கு) |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய திரு. ஜீவகன், கூடலூார் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– 1)** திரு.ஜீவகன் ஒப்பந்ததாரர் கூடலார் அவர்களின் விலைப்புள்ளி ஏற்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை ஏற்கலாம்.

3) செலவினத்திற்கு அனுமதிக்கலாம்.

10) இந்நகராட்சி உரத் திடலில் தேங்கியுள்ள கழிவுகளை பொக்லைன் இயந்திரம் மூலம் சமன் செய்யும் பணியினை மேற்கொள்ள விலைப்புள்ளிகள் கோரப்பட்டடதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு. உசைன், கூடலூார் | ரூ.2050 ( ஒரு மணி நேரத்திற்கு) |
| 2 | திரு. ஜீவகன், கூடலூார் | ரூ.2100 ( ஒரு மணி நேரத்திற்கு) |
| 3 | திரு. ஜெகநாதன், கூடலூார் | ரூ.2150 ( ஒரு மணி நேரத்திற்கு) |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய திரு. உசைன், கூடலூார் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– 1)** அனுமதி வழங்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை ஏற்கலாம்.

11) இந்நகராட்சியின் பொறியியல் பிரிவு பயன்பாட்டில் இயங்கும் TN 43 z 4203 சீருந்து வாகனத்தை வருடாந்திர ஆயுள் காப்பீட்டு காலவதி ஆகும் நிலையில் 14.07.2021 முதல் 14.07.2022 வரை ஒராண்டிற்கு ரூ.11745/– ஐ தி யூனைட்டட் இந்தியா கோ லிமிட்டட் நிறுவனத்தின் மூலம் காப்பீட்டு புதுபித்து கொள்ளவும் மன்ற அனுமதி எதிர் நோக்கி தொகை ரூ.11745/– ஐ செலுத்தயமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** அனுமதி வழங்கலாம்.

12) இந்நகராட்சி ஆணையாளர் பயன்பாட்டில் உள்ள பொலீரோ ஈப்பு வாகனம் TN 43 X 6111 வாகனத்தை வருடாந்திர ஆயுள் காப்பீட்டு காலவதி ஆகும் நிலையில் 07.08.2021 முதல் 08.08.2022 வரை ஒராண்டிற்க்கு ரூ.11053/– ஐ செலுத்தி தி யூனைட்டட் இந்தியா கோ லிமிட்டட் நிறுவனத்தின் மூலம் காப்பீட்டு புதுபித்து கொள்ளவும் மன்ற அனுமதி எதிர் நோக்கி தொகை ரூ.11053/– ஐ செலுத்தயமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** அனுமதி வழங்கலாம்.

13) இந்நகராட்சி பொது சுகாதரா பிரிவிற்கு தேவையான புகை மருந்து இயந்திரம் கொள்முதல் செய்வதற்காக ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| பணியின் விபரம் | ஸ்டீவின் அசோசியேட்ஸ் முளகுமூடு | சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட், பொள்ளாச்சி |
|---|---|---|
| இந்நகராட்சி பொது சுகாதரா பிரிவிற்கு தேவையான புகை மருந்து இயந்திரம் கொள்முதல் செய்தல் | ரூ.59000/- (இயந்திரம் ஒன்றுக்கு) | ரூ.56000/- (இயந்திரம் ஒன்றுக்கு) |

**அலுவலக குறிப்பு – 1)** வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கிய திருவாளர்கள். சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட், பொள்ளாச்சி நிறுவனம் ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

**2)** பொது சுகாதார அவசர அவசியம் கருதி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை ஏற்கலாம்.

14) இந்நகராட்சி உரத் திடலில் தேங்கியுள்ள கழிவுகளை பொக்கலைன் இயந்திரம் மூலம் சமன் செய்யும் பணியினை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – 1)** அனுமதி வழங்கலாம்.

**2)** பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரியதை ஏற்கலாம்.

15) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோணா தொற்று ஏற்பட்ட பகுதிகளிலிருந்து பொதுமக்கள் பிற பகுதிகளுக்கு செல்வதை தடுப்பதற்காக தகர ஷீட்டுகள் கொண்டு அடைப்பு ஏற்படுத்தும் பணியினை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– 1)** அனுமதி வழங்கலாம்.

**2)** பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரியதை ஏற்கலாம்.

16) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 இரும்புபாலம் பகுதியில் இயக்கப்படும் மூன்று டர்பன் மோட்டார்கள் 2010–2011 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இரவு பகலாக இயங்கி வருவதால் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. இதனால் பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் 40 HP மோட்டார் புதிதாக விநியோகம் செய்யவும் 40 HP டர்பன் மோட்டார் முழுவதுமாக ரிப்பேர் செய்யவும் தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு குடிநீர் திட்ட நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** அனுமதி வழங்கலாம்.

17) இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் TN 43 Z 5433 குடிநீர் வாகனத்திற்கு மோட்டார் பழுது சரி செய்ய விலைப்புள்ளி கோரியதில் **21.06.21** அன்று வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளை மன்றத்தின் பரிசீலணைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்.மீரா எலக்டிரிக்கல்ஸ் வர்க்ஸ், கள்ளிகோடை சாலை, கூடலூர் | ரூ.17600/– |
| 2 | திருவாளர்.அனீபா என்ஜிநியரிங் வர்க்ஸ், கள்ளிகோடை சாலை, கூடலூர் | ரூ.19800/– |
| 3 | திருவாளர்.தன்யா எலக்டிரிக்கல் வர்க்ஸ், கள்ளிகோடை சாலை, கூடலூர் | ரூ.19900/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் **1** ல் கண்ட மீரா எலக்டிரிக்கல்ஸ் வர்க்ஸ், கள்ளிகோட்டை சாலை, கூடலூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி மிகவும் குறைவாக உள்ளதால் அதனை ஏற்றுக் கொள்வது குறித்து மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – கோவிட் 19 பெருந்தொற்று பரவல் அதிகமாக உள்ளதால் அப்பகுதிக்கு குடிநீர் விநியோகம் தடையின்றி செயல்படுத்த மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கி வாங்கி கொள்ளவும் அதற்கு ஏற்படும் செலவினங்களுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

18) இந்நகராட்சியின் குடிநீர் வாகனம் (டேங்கர் லாரி) TN 43 Z 4443 கொண்ட வாகனத்திற்கு விலைப்புள்ளி கோரியதில் **07.06.2021** அன்று வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளை மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | 825 * 6 Size கொண்ட டயர் 1 ன் விலை | தொகை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ ஹரி டயர்ஸ், ராஜகோபாலபுரம், கூடலூர் | ரூ.13100 * 6 | ரூ.78600/– |
| 2 | ஸ்ரீ பாலகிருஷ்ணண் டயர்ஸ், ராஜா ஸ்டீரிட், கோவை | ரூ.13250 * 6 | ரூ.79500/– |
| 3 | ராஜாளி டயர்ஸ், ராம் நகர், கோவை | ரூ.13200 * 6 | ரூ.79200/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் **1** ல் கண்ட ஸ்ரீ ஹரி டயர்ஸ் நிறுவனத்தின் விலை புள்ளி மிகவும் குறைவாக உள்ளதால் அதனை ஏற்றுக் கொள்வது குறித்து மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – கோவிட் 19 பெருந்தொற்று பரவல் அதிகமாக உள்ளதால் அப்பகுதிக்கு குடிநீர் விநியோகம் தடையின்றி செயல்படுத்த மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கி கொள்ளவும் அதற்கு ஏற்படும் செலவினங்களுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

19) இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் TN 43 Z 4443 குடிநீர் வாகனத்திற்கு செல்ப் மோட்டார்கள் பழுது சரி செய்ய விலைப்புள்ளி கோரியதில் 21.06.2021 அன்று வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளை மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திருவாளர்கள் பயனீர் ஆட்டோ கேரேஜ், கள்ளிக்கோட்டை சாலை, கூடலூர் | ரூ.19600/– |
| 2. | திருவாளர்கள் மேட்டுப்பாளையம் ஆட்டோ கேரேஜ், மேட்டுப்பாளையம் | ரூ.20550/– |
| 3. | திருவாளர்கள் கூடலூர் ஆட்டோ கேரேஜ், கள்ளிக்கோட்டை சாலை, கூடலூர். | ரூ.20650/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் கண்ட பயனீர் ஆட்டோ கேரேஜ், கள்ளிக்கோட்டை சாலை, கூடலூர் மிகவும் குறைவாக உள்ளதால் அதனை ஏற்றுக் கொள்வது குறித்து மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – கோவிட் 19 பெருந்தொற்று பரவல் அதிகமாக உள்ளதால் அப்பகுதிக்கு குடிநீர் விநியோகம் தடையின்றி செயல்படுத்த மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கி வாங்கி கொள்ளவும் அதற்கு ஏற்படும் செலவினங்களுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

20) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு 5 MT பிளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்வதற்காக ரூ.2.50 இலட்சம் நகர்மன்ற தீர்மானம் எண் 58 நாள் 31.05.2021 ன்படி அனுமதி வழங்கப்பட்டது. விலைப்புள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண் 60 நாள் 31.05.2021 ன்படி குறைவான விலைப்புள்ளி அனுமதிக்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட விலைப்புள்ளியின்படி கூடுதல் செலவினம் ரூ.20000/– ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்.

21) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் 5 புகை மருந்து இயந்திரங்களில் ஏற்பட்ட பழுதுகளை நீக்கம் செய்வதற்காக ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்த புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| பணியின் விபரம் | ஸ்டீவின் அசோசியேட்ஸ் முளகு மூடு | சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட், பொள்ளாச்சி |
|---|---|---|
| இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் 5 புகை மருந்து இயந்திரங்களில் ஏற்பட்ட பழுதுகளை நீக்கம்செய்தல் | ரூ.88000/– | ரூ.85000/– |

அலுவலக குறிப்பு – 1) வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கிய திருவாளர்கள். சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட், பொள்ளாச்சி நிறுவனம் ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை ஏற்கலாம்.

22) இந்நகராட்சியில் 2020–21 ம் ஆண்டில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யும் தொகைக்கும், குத்தகைதாரர்களிடமிருந்து வசூலிக்கும் தொகைக்கும் GST கணக்கு தாக்கல் செய்யவும், வருமான வரி கணக்கீடு செய்து வருமான வரி துறைக்கு கூனுளு தாக்கல் செய்யவும் மற்றும் கணக்கு பிரிவில் புதிய கணக்கீட்டின்படி ஆண்டு கணக்குகள் (Annual account) தயாரிக்க ஆகும் உத்தேச செலவு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்.

23) இந்நகராட்சிக்குட்பட்ட 14 வது வார்டு காளம்புழா முதல் வார்டு எண் 21 வேடன்வயல் வரை உள்ள ஓடையினை சுமார் 2 கி.மீட்டர் நீளத்திற்கு துார்வார மாண்புமிகு வனத்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டமைக்கிணங்க புறமனவயல், கொக்ககாடு, யாணை செத்தகொல்லி மற்றும் வேடன்வயல் ஆகிய பகுதிகள் ஓடையை சார்ந்து வருவதால் ஓடையை சார்ந்துள்ள சுமார் 400 க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இஸ்லாமிய பொதுமக்கள் மற்றும் இதர இனத்தவர்கள் பாதிக்காதவண்ணம் பேரிடர் மேலான்மை திட்டத்தின் கீழ் சுமார் 2 கிலோ மீட்டர் துாரத்திற்கு ஓடையினை துார்வாரவும் அதற்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் செலவு செய்து கொள்ளவும் இப்பணியானது முக்கியத்துவம் வாய்ந்த பணி என்பதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் துரிதமாக பணியினை முடிக்க உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மேற்படி பணியை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.உசைன் மூலமாக செய்து கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

24) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேரடி ஆய்வு கூட்ட அறிவுரைகள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், கூடலுார் அவர்களின் ந.க.ஆ1.100/2021 நாள் 28.03.2021 ன்படி நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டுகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களை வருகின்ற சட்டமன்ற தேர்தல் 2021 ற்கு தயார் நிலையில் வைக்க வாக்குச்சாவடி மையங்களின் கதவு மற்றும் ஜன்னல், மின் இணைப்பு, குடிநீர் வசதி, மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் சாய்தள பணிகள் ஆகியவைகளை உடன் சரி செய்து பணிகளை மேற்கொண்டு 100 சதவீதம் சரியாக உள்ளது என சான்றளிக்க அறிவுறுத்தப்பட்ட நிலையில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் உடனடியாக பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சியின் ஒப்பந்ததாரர் திரு.சாஜி என்பவருக்கு 12.03.2021 அன்று வேலை உத்திரவு வழங்கி பணிகளை மேற்கொண்டமைக்கு அதற்கான செலவினம் ரூ.4.90 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 1) திரு.சஜி, ஒப்பந்ததாரர் அவர்களுக்கு 12.03.2021 அன்று தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கி பணிகளை செய்து கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) அவசர அவசியத்தினை கருதி தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்த இப்பணிகளை செய்து கொண்டமைக்கும் அதற்கான செலவிம் ரூ.4.90 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

25) இந்நகராட்சிக்குட்பட்ட கல்குவாரி, கோழிப்பாலம் நம்பவர்–1, நம்பர்–2 செம்பாலா, தட்டகொல்லி, தொரப்பள்ளி, பள்ளிவாசல் ஆகிய பகுதிகளில் உள்ள பம்பு அறைக்கு எலக்டிரிக்கல் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் நம்பர்–4 செக்டேம் மற்றும் ஹெலன் செக்டேம் துார்வாரி குடிநீர் குழாய் மாற்றி அமைத்தல் பணியினை மேற்கொள்ள அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் நடைபெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ ண் | முணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்ததாரர் புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட கல்குவாரி, கோழிப்பாலம் நம்பவர்–1, நம்பர்–2 செம்பாலா, தட்டகொல்லி, தொரப்பள்ளி, பள்ளிவாசல் ஆகிய பகுதிகளில் உள்ள பம்பு அறைக்கு எலக்டிரிக்கல் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் நம்பர்–4 செக்டேம் மற்றும் ஹெலன் செக்டேம் துார்வாரி குடிநீர் குழாய் மாற்றி அமைத்தல். | ரூ.6.60 | திரு.ஷாஜி | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.உசைன் | 0.67% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட ஒப்பு நோக்கு பட்டியலின்படி குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த திரு.சாஜி அவர்களின் ஒப்பந்த புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி ஏற்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திரு.சாஜி அவர்களின் ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

26) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18 தோட்டமூலா ரோஜா நகர் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்க பொது மக்கள் கேட்டு கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதி வழங்கலாம்.

27) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 தொரப்பள்ளி குட்ஷிப்பேடு பம்பு அறைக்கு MS LADDER and 80 MM Dia GI Pipe and Electricals Items புதிதாக மாற்றம் செய்ய நகர்மன்ற தீர்மானம் எண் நாள் அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள அன்று ஒப்பந்த புள்ளி கோரியதில் நடைபெற்ற ஒப்பந்த புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்ததாரர் புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 தொரப்பள்ளி குட்ஷிப்பேடு பம்பு அறைக்கு MS LADDER and 80 MM Dia GI Pipe and Electricals Items புதிதாக மாற்றம் செய்தல் | ரூ.1.80 | திரு.ஷாஜி | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.உசைன் | 0.21% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட ஒப்பு நோக்கு பட்டியலின்படி குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த திரு.சாஜி அவர்களின் ஒப்பந்த புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி ஏற்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திரு.சாஜி அவர்களின் ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

28) இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படும் 50 MM GI குடிநீர் குழாய்கள்,40MM & GI குடிநீர் குழாய்கள், 50 MM & GI குடிநீர் குழாய்கள் மற்றும் 25 MM & GI குடிநீர் குழாய்கள் துருபிடித்தும், உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாக வெளியில் செல்வதால் கோடை காலங்களில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க செம்பாலா, ஈட்டிமூலா, கே கே நகர், சுங்கம், BDO அலுவலகம், தொரப்பள்ளி, மாக்கமூலா, கோக்கால், மேல்கூடலூர், நந்தட்டி, அத்திபாளி,செவிடிபேட், காளம்புழா சாலை, முதல்மைல்,தட்டகொல்லி, எஸ் எஸ் லாட்ஜ் ஆகிய பகுதிகளில் உள்ள மேற்கண்ட குடிநீர் குழாய்களில் உதிரிபாகங்கள் மற்றுவதற்கும் காந்தி நகர் பகுதியில் உள்ள குடிநீர் தொட்டிக்கு கூடுதலாக குடிநீர் கொண்டு செல்வதற்கு குயின்ட் பகுதியிலிருந்து 110 MM HD குழாய்மூலம் கொண்டு வருவதற்கு சுமார் 550 மீட்டர் நீளத்திற்கு குழாய்கள் அமைத்து இக்குழாய்களை யாணைகள் சேதப்படுத்தாமல் இருப்பதற்கு ஒரு அடி ஆழத்திற்கு குழி தோண்டி மூடுவதன் மூலம் குழாய்கள் பாதுகாப்பாக காந்திநகர் பகுதியில் உள்ள குடிநீர் தொட்டிக்கு கொண்டு செல்வதற்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7.00இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும் கோடை காலம் நிலவுவதால் பணியின் அவசர அவசியம் கருதி பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு தமிழ்நாடு மாவட்ட சட்டம் பிரிவு 15 ன் கீழ் பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சியின் பதிவு பெற்ற தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரான திரு.உசைன் அவர்கள் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதி வழங்கலாம்.

29) இந்நகராட்சிக்கு சொந்தமான கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டும் பகுதியில் தேக்கு மரம், ஈட்டி மரம், நாவல் மரம் மற்றும் காட்டு மரம் ஓவேலி சாலை ஓரம் உள்ளதால் கட்டிடம் கட்டுவதற்கு இடையூறாக உள்ளது. தேக்கு மரம் மற்றும் ஈட்டி மரம் வெட்டுவதற்கு வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் 19.08.2020 அன்று அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்ற கூட்ட தீர்மானம் எண் 563 ல் வரிசை எண். அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி வரப்பெற்ற விலைபுள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கு இடையூறாக உள்ள மரங்களை வெட்டி அகற்றுதல். | திருவாளர்.ஹாம்சன் பில்டர்ஸ் | ரூ.60000/– |
| | | திருவாளர்.சில்வர் லைன் பில்டர்ஸ், கூடலூர் | ரூ.65000/– |
| | | திரு.அப்துல் ரகுமான் | ரூ.68000/– |

மேற்படி ஒப்பு நோக்கு பட்டியலின்படி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்.ஹாம்சன் பில்டர்ஸ் கூடலூர் அவர்களின் ஒப்பந்த புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

30) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 21 வேடன்வயல் பகுதியில் சாலையோரம் மன்சரிவு ஏற்பட்டு சாலை பழுது ஏற்பட்டு வருவதால் தடுப்புச்சுவர் அமைத்து தர பொது மக்கள் கேட்டு கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

31) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் 30 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பருவ காலம் துவங்கியுள்ளதாலும், நகரின் ஒரு சில பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவி வருவதாலும் டெங்கு தடுப்பு பணியாளர்களை மேலும் மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

32) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 1897/2017/பி3 நாள்.20.07.2021 ன் படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை பாரதம் திட்டத்தின் படி 5 பரப்புரையாளர்கள் மற்றும் 1 மேற்பார்வையாளரை நியமனம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி பணியாளர்கள் இந்நகராட்சியில் பணிபுரியவும் அவர்களுக்கு ஊதியம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல்முறைப்படி வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

**ஆணையாளர்**
**கூடலூர் நகராட்சி (நீலகிரி)**

கூடலூர் நகராட்சி(நீலகிரி)
19.07.2021 ம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற
இந்நகராட்சியின் நகர்மன்ற அவசர கூட்டத்தின் நடவடிக்கை நகல்.
தலைமை– திரு.வீ.பாஸ்கரன்.எம்.ஏ.,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்

1) இந்நகராட்சியின் 2020–2021 ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது

**அலுவலககுறிப்பு:–** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

ஆணையாளர்
கூடலூர் நகராட்சி (நீலகிரி)